திரு. வீ. செல்லத்துரை : சேலம்-ஓமலூர் வழியாகச் மேட்டூர் செல்லும் பிராட்கேஜ் லைனும், சேலம் பங்களூர் லைன் ஓமலூர் வழியாகச் செல்லும் மீட்டர் கேஜ் லைனும் ஒரே கேட்டில் அமைந்துள்ளது. கேட் மூடிவிட்டால் ½ மணி நேரம் வரையில் கேட் திறப்பதில்லை. ஆகவே, அங்கு போக்கு வரத்துக்குத் தடையாக இருக்கிறது. மேற்படி கேட்டில் மேம்பாலம் கட்ட அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ் நாட்டில் ஓடுகின்ற ரயில்வே குறுக்குப் பாதைகளிலெல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டும். நிதி நிலைக்கு ஏற்ப அவ்வப்பொழுது யோசிக்கலாம்.

அய்யனேரி கால்வாய்

*673 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கேத்தாண்டப் பட்டியில் உள்ள அய்யனேரி கால்வாயைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : இந்த கேத்தாண்டப்பட்டியில் உள்ள அய்யனேரி கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. ஆகவே, இந்த ஆண்டில் எப்படியாவது தூர் வார அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இக்கால்வாயைப்பற்றி இப்பொழுது ஒன்றும் திட்டம் இல்லை என்று நான் தெரிவித்தேன். ஆனால், கேத்தாண்டப்பட்டி கிராமத்தருகில் பெத்தகல்லுப்பள்ளி கால்வாயை (கல்லாற்றில் ஆரம்பித்து கேத்தாண்டப்பட்டி அய்யனேரி கலங்கல் கால்வாயுடன் சேருமிடத்தில்) சீரமைக்கும் திட்டம் முன்னோடி ஆய்வில் உள்ளது. இத் திட்டத்திற்கான மதிப்பீடு சுமார் ரூ. 44,000.

திருப்பத்தூர் அருகே வெள்ளக் கால்வாய் புனரமைப்பு

*674 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஏரிக்கு வரும் வெள்ளக் கால்வாயை புனரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைபெறும் ?